# நமது தின கனி

மாலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 271 | 4 Pages | 4.5.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 271 | 4 பக்கங்கள் | 4.5.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# பாஜக ஆட்சியில் பத்திரிகை சுதந்திரம் பறிபோனது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, மே.4

உலக பத்திரிகை சுதந்திர தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

உலக பத்தரிகை சுதந்திர தினத்தன்று, கடுமையான யதார்த்தத்தை நாம் எதிர்கொள்கிறோம். பாஜக ஆட்சியின் கீழ், இந்தியாவின் பத்திரிகை சுதந்திரம் பறிபோனது.

பத்திரிகை சுதந்திரத்துக்கான பட்டியலில் இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது. கௌரி லங்கேஷ், கல்புர்கி போன்ற பத்திரிக்கையாளர்களின் கொலைகள், சித்திக் கப்பன், ராணா அய்யூப் போன்ற பத்திரிக்கையாளர்களை தொடர்ந்து மிரட்டுவதுடன், அதிகாரத்திற்கு எதிராக உண்மையை பேசத்துணிந்த பலரையும்தொடர்ந்துமிரட்டுகிறது. பின்னர்,பத்திரிகைசுதந்திரத்திற்காக வண்ணம் பூசி பாஜக ஆட்சி வருந்துகிறது.

ஜனநாயகத்தில் பத்திரிகைகளின் பங்கை நாம் கொண்டாடும்போது, சுதந்திரமான பேச்சுரிமையின் மதிப்புகளை நிலைநிறுத்துவதற்கும், பத்திரிகையாளர்கள் அச்சமின்றி அல்லது அடக்குமுறை தணிக்கையின்றி பணியாற்றுவதை உறுதிசெய்வதற்கும் நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டின் மகள்கள் தோற்றனர்; பிரிஜ் பூஷன் வென்றார் ராமர் காட்டிய பாதை இதுதானா என சாக்ஷி மாலிக் வேதனை



உத்தரப் பிரதேசம், மே.4

உத்தரப் பிரதேசத்தின் கைசர்கஞ்ச் தொகுதியில் 2009 ஆம் ஆண்டிலிருந்து ப்ரஜ்பூஷன் சிங் எம்.பியாக உள்ளார். கடைசியாக நடைபெற்ற 2019 மக்களவைத் தேர்தலில், பிரிஜ் பூஷன் இரண்டு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் கைசர்கஞ்ச் தொகுதியில் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், சிட்டிங் பாஜக எம்.பி. ப்ரஜ்பூஷன் சிங்குக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்காமல், அவரது மகன் கரண்பூஷன் சிங்கை உத்தரப் பிரதேசத்தின் கைசர்காஞ் தொகுதியின் வேட்பாளராக பாஜக. அறிவித்துள்ளது.

ப்ரஜ்பூஷன் சிங் மீது மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகாரளித்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. அதன் விளைவாக தான் ப்ரஜ்பூஷன் சிங்குக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் தனது எக்ஸ் பக்கத்தில் வேதனையுடன் பதிவிட்டுள்ளார். அதில்,

"நாட்டின் மகள்கள் தோற்றனர்; பிரிஜ் பூஷன் வென்றார்

நாங்கள் அனைவரும் எங்கள் தொழிலை பணயம் வைத்து, வெயிலிலும் மழையிலும் பல நாட்கள் தெருக்களில் தூங்கினோம். இன்று வரை பிரிஜ் பூஷன் கைது செய்யப்படவில்லை. நாங்கள் எதையும் கோரவில்லை, நீதியை மட்டுமே கோருகிறோம்.

கைது செய்வதை விடுங்கள், இன்று பிரிஜ் பூஷனின் மகனுக்கு சீட்டு கொடுத்து நாட்டின் கோடிக்கணக்கான மகள்களின் மன உறுதியை உடைத்துள்ளீர்கள்.

ஒரே ஒரு குடும்பத்துக்கு மட்டும் சீட்டு கொடுக்கப்படுகிறது. ஒரு மனிதனுக்கு முன்னால் இவ்வளவு பலவீனமாக நம் அரசு உள்ளதா?

ஸ்ரீராமரின் பெயரில் வாக்குகள் மட்டுமே தேவை, அவர் காட்டிய பாதை என்ன?" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## பயப்பட வேண்டாம், கோவாக்சின் பாதுகாப்பானது தான் பாரத் பயோடெக் விளக்கம்

டெல்லி, மே.4

கோவிஷீல்டு தடுப்பூசியால் மிகவும் அரிதாக பக்க விளைவுகள் ஏற்படுகிறது என பிரிட்டன் நீதிமன்றத்தில் ஆஸ்ட்ராஜென்கா நிறுவனம் கூறிய நிலையில், கோவாக்சின் (COVAXIN) மிகவும் பாதுகாப்பானது என பாரத் பயோடெக் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில், "பாதுகாப்பு எனும் ஒற்றை இலக்கை குறிக்கோளாக கொண்டு தான் கோவாக்சின் உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் கோவிட் 19 தடுப்பூசி திட்டத்தின் கீழ் செயல்திறன் சோதனை செய்யப்பட்ட ஒரே கோவிட் 19 தடுப்பூசி கோவாக்சின் மட்டும் தான்."

"உரிமம் பெறும் வழிமுறையின் கீழ் கோவாக்சின் தடுப்பூசி 27 ஆயிரம் பேரிடம் பரிசோதிக்கப்பட்டது. மருத்துவ பரிசோதனை முறையில், தேவையான பாதுகாப்பு நெறிமுறைகளுக்கு உட்பட்டு பரிசோதனை நடைபெற்றது."

"கோவாக்சின் பாதுகாப்பு தொடர்பாக மத்திய அரசின் சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பில் மதிப்பீடு செய்யப்பட்டது. கோவாக்சின் ஆயுள் காலம் தொடர்பாக தொடர்ச்சியான பாதுகாப்பு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன."

"மேலே குறிப்பிடப்பட்டு இருக்கும் ஆய்வு முடிவுகள் மற்றும் தொடர்ச்சியான பாதுகாப்பு வழிமுறைகள் அடிப்படையில் கோவாக்சின் பாதுகாப்பு விஷயத்தில் எவ்வித குறைபாடும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது."

"அனுபவம் மிக்க ஆய்வாளர்கள் அடங்கிய பாரத் பயோடெக் குழுவினர் கோவிட் தடுப்பூசிகளின் ஆயுட்காலம் குறைவு என்பதை நன்கு அறிந்துள்ளனர். எனினும், இவை பயனாளிகள் உடலில் அவர்களது ஆயுள் முழுமைக்கும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். இதன் காரணமாக எங்களது அனைத்து தடுப்பூசிகளும் பாதுகாப்பு எனும் ஒற்றை நோக்கத்தை குறிக்கோளாக கொண்டே உருவாக்கப்படுகிறது," என குறிப்பிட்டுள்ளது.

## அசாம் மாநிலத்தில் கனமழை: நிலச்சரிவால் பல இடங்களில் தகவல் தொடர்பு துண்டிப்பு

அசாம், மே.4

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக இயல்பை விட அளவுக்கு அதிகமான வெப்பம் பதிவாகி வருகிறது. மேலும், ஒவ்வொரு நாளும் வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகம் என்றும், ஒவ்வொரு பகுதிக்கும் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் பல பகுதிகளிலும் கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. ஆனால், அதே சமயம் ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.

அண்மையில் ஜம்மு காஷ்மீரில் கொட்டி தீர்த்த கனமழையால் பல இடங்களில் பனிச்சரிவு ஏற்பட்டது.

தற்போது அசாம் மாநிலத்தில் கொட்டி தீர்க்கும் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அசாமின் டிமா ஹசாவ் மாவட்டத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் பல இடங்களில் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

மே 4 ஆம் தேதி வரை டிமா ஹசாவ் மாவட்டத்தில் கனமழை பெய்யும் என்பதால் அதுவரை பொதுமக்கள் தேவையின்றி வெளியே செல்ல வேண்டாம் என்று அம்மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. மேலும் அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் மே 04 ஆம் தேதி வரை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கர்ப்பிணி பெண் உயிரிழந்த விவகாரம் ரெயில்வே அதிரடி உத்தரவு






சென்னை, மே.4

சென்னையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு கொல்லத்துக்கு புறப்பட்ட எக்ஸ்பிரஸ் ரெயில், உளுந்தூர்பேட்டைக்கும், விருத்தாசலத்துக்கும் இடையே வந்தபோது, 7 மாத கர்ப்பிணி பெண் கஸ்தூரி (22) தவறி கீழே விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்த, கர்ப்பிணி கஸ்தூரியின் உடல் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது வயிற்றில் 7 மாத ஆண் குழந்தை சடலமாக இருந்தது பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், ஓடும் ரெயிலில் இருந்து பெண் தவறி விழுந்து உயிரிழந்த விவகாரத்தில் விபத்து தொடர்பாக உரிய விசாரணை நடத்த ரெயில்வே துறை அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும், அனைத்து ரெயில்களிலும் பாதுகாப்பு அம்சங்கள் சரிவர இயங்குகிறதா ? என்பதை கண்காணிக்கவும் உத்தரவிடப்பட்டு உள்ளது.

## ரூ.16.17 லட்சம் மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல்



திருச்சி, மே.4

வெளிநாடுகளில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு வரும் விமானங்களில் அதிக அளவில் கடத்தல் தங்கம் கடத்தப்பட்ட வருவது, அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்வதும் வாடிக்கையாகி உள்ளது. திருச்சி விமான நிலையத்தில் துபாய், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் இருந்து அதிக அளவில் கடத்தல் தங்கம் கைப்பற்றப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து திருச்சிக்கு வந்த ஏர் ஏசியா விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத்துறைஅதிகாரிகள்சோதனை செய்தனர். அப்போது சந்தேகத்திற்குஇடமானவகையில் வந்த 3 பயணிகளின் டிராவல் பேக்கில் சோதனை செய்தபோது அதில் சுருள் வடிவில் மறைத்து எடுத்து வந்த 235 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மதிப்பு இந்திய ரூபாயில் ரூ.16.17 லட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில்.விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றியம் பெரமண்டூர் ஊராட்சியில் நீர் மோர் பந்தலை மயலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் மணிமாறன் அவர்கள் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் முகர் தர்பூசணி வெள்ளரிக்காய் குளிர்பானம் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் கிழக்கு கழக செயலாளர் ஒன்றிய பதிந்துகள் கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## ஆவியூர் கல்குவாரி வெடி விபத்து குறித்து பேட்டி எடுக்க சென்ற செய்தியாளர் மரணம்



சென்னை, மே.4

ஆவியூர் கல்குவாரி வெடி விபத்து குறித்து சுட்டரிக்கும் வெயிலில் செய்தி சேகரிக்க சென்ற அருப்புக்கோட்டையை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி (சன் நியூஸ்) செய்தியாளர் ராஜா (42) மயங்கி விழுந்து உயிரிழந்தார் இரண்டாவது நாளாக கல்குவாரி வெடி விபத்து குறித்து கட்டெரிக்கும் கடும் வெயிலில் சென்று செய்தி சேகரித்து விட்டு செய்தி அனுப்புவதற்காக தனது அலுவலகம் திரும்பிய தனியார் தொலைக்காட்சி (சன் டிவி) செய்தியாளர் ராஜா மயங்கி விழுந்ததை தொடர்ந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# சேரன்மகாதேவி ஸ்காட் பொறியியல் கல்லூரி மாணவர்கள் டோரா இயந்திர மனிதனை உருவாக்கி சாதனை

நெல்லை, மே.4

திருநெல்வேலி சேரன்மகாதேவி ஸ்காட் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அதிநவீன டோரா இயந்திர மனிதனை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர். இக்கல்லூரியில் 6 இளநிலை படிப்புகளும், 4 முதுகலை படிப்புகளும், எம்பிஏ மற்றும் ஆராய்ச்சி படிப்புகளும் கற்றுத் தரப்படுகின்றன. ஸ்காட் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பல்கலைக் கழக ஆய்வகங்கள் மட்டுமின்றி அதிநவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய சர்வதேச தரத்துடன் கூடிய அப்ளைட் ஆய்வகங்கள் மாணவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் இங்கு பயிலும் மாணவர்கள் இரண்டு தொழிற்சாலைகளை கல்லூரி வளாகத்தில் நிர்வகித்து வருகின்றனர். மேலும் டெக்னோவிஷன், சிலித்திரின் போன்ற தொழில்நுட்பத்தில் முன்னோடியாக விளங்கும் தொழிற்சாலைகள்



கல்லூரி வளாகத்தில் அமையப் பெற்றுள்ளன. இங்கு பயிலும் மாணவர்கள் பல்கலைக்கழகங்கள் ஆய்வகங்கள் மட்டுமல்லாமல் பல்வேறு ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் தொழிற்பயிற்சி பெறுகின்றனர்.

இரண்டாம் ஆண்டு மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு மாணவர்கள் சஞ்சய், மாதவன், அருள்ராஜ், முத்து சுதர்சன் ஆகிய மூன்று மாணவர்கள் அதிநவீன இயந்திர மனிதனை உருவாக்கி சாதனைப்படுத்துள்ளனர்.

மேலும் இந்த இயந்திர மனிதன் சேரன்மகாதேவி ஸ்காட் பொறியியல் கல்லூரிக்கு விஜயம் செய்யும் சிறப்பு விருந்தினர்கள், வல்லுனர்கள், பெற்றோர்களை வரவேற்று கல்லூரியின் சிறப்பு அம்சங்களை தனது குரல் மூலம் விளக்குகிறது. கல்லூரியில் பயிற்சிவிக்கப்படும் பாடத்திட்டங்கள், வேலைவாய்ப்பு சாதனைகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், பல்கலைக்கழக தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற டாப் 10 ரேங்குகள், அதிநவீன ஆய்வக சாதனைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தகவல்களை உயிருள்ள மனிதன் போல பார்வையாளர்களை கண்களால் பார்த்து தனது குரலால் அனைத்து தகவல்களையும் தெரிவிக்கிறது. இங்கு வருகை தரும் அனைத்தும் பார்வையாளர்களையும் டோனா என்ற செல்லப் பெயரில் அழைக்கப்படும் இயந்திர மனிதன் கவர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

டோனா என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய மாணவர்களை ஸ்காட் கல்விக் குழுமத் தலைவர் எஸ். கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் கி. அருண் பாபு, ஸ்காட் கல்விக் குழும தாளாளர் திருமதி. பிரியதயர்சினி, பொது மேலாளர் (வளர்ச்சி) ஜெயக்குமார், திறன்மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு துறை இயக்குநர் பேராசிரியர் சி.கே. இரவிசங்கர், பொது மேலாளர் (வளாகம்) ஆர். தம்பிதுரை, முதல்வர் ஏ. ஜஸ்டின் திரவியம், நிர்வாக அலுவலர் ஜெயபாண்டி, திறன் மேம்பாட்டு துறை அதிகாரி சந்தானகிருஷ்ணன், அப்ளைட் ஆய்வகங்களின் நிர்வாக மேற்பார்வையாளர் விஜய் பிரகாஷ், அனைத்து துறை தலைவர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டினர்.

# நாமக்கல் அருகே சிக்கன் ரைஸ்சில் விஷம் கலந்து தாத்தா கொலை: பாசக்கார பேரன் கைது

நாமக்கல் மே 04

நாமக்கல் அருகே சிக்கன் ரைஸ் சாப்பிட்டு ஒருவர் இறந்த சம்பவத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. தன்னை கண்டித்த தாத்தா மற்றும் அம்மாவை கொலை செய்ய, சிக்கன் ரைசில், விஷம் கலந்து கொடுத்த கல்லூரி மாணவரை போலீசார் கைது செய்தனர்.

நாமக்கல் அருகே உள்ள கொசவம்பட்டியை சேர்ந்தவர் சுரேஷ், லாரி டிரைவர். இவரது மகன் பகவதி (20), புதுச்சத்திரத்தில் உள்ள தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் 3ம் ஆண்டு பி.இ. படித்து வந்தார். மேலும் இவர் நாமக்கல்லில் உள்ள தனியார் இசேவை மையத்தில் பகுதி நேரமாக வேலை பார்த்து வந்தார். வேலைக்கு சேர்ந்து முதல் மாதம் சம்பளத்தை பெற்ற பகவதி, கடந்த ஏப். 30 ஆம் தேதி நாமக்கல் பஸ் ஸ்டேண்ட் எதிரே உள்ள அசைவ ஓட்டலில், 7 சிக்கன் ரைஸ் பொட்டலம் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு சென்றார்.

வீட்டில் இருந்த அவரது தாயார் நதியாவிற்கு (40) ஒரு பொட்டலம் சிக்கன் ரைஸ் கொடுத்துள்ளார். பின்னர் தேவராயபுரத்தில் வசித்து வரும் தாத்தா சண்முகநாதன் (67) வீட்டிற்கு சென்று அங்கு தாத்தா சண்முகநாதன் மற்றும் குடும்பத்தினருக்கு முதல் மாத சம்பளத்தில் சிக்கன் ரைஸ் வாங்கி வந்துள்ளேன் சாப்பிடுங்கள் என கொடுத்துள்ளார். இதற்கிடையே மகன் ஆசையாக வாங்கி வந்த சிக்கன் ரைசை சாப்பிட்ட நதியா, சண்முகநாதன் ஆகியோருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் மீதமுள்ளவர்கள் சிக்கன் ரைஸ் சாப்பிடவில்லை.

இதையடுத்து உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த நதியா, சண்முகநாதன் ஆகிய இருவரையும் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, செயற்கை சுவாசம் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தனர். முன்னதாக சிகிச்சைக்கு வந்த 2 பேரும் வாயில் நுரை தள்ளியபடி வந்துள்ளனர் எனவே அவர்களுக்கு உணவு ஒவ்வாமையால் பிரச்சினை ஏற்பட்டு இருக்க வாய்ப்பு குறைவு எனவும், சாப்பாட்டில் விஷம் கலந்து இருக்க வாய்ப்பு இருக்கலாம் எனவும் ஆஸ்பத்தரியில் உள்ள மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதேபோல் சம்மந்தப்பட்ட ஓட்டலில் கடந்த 30ந் தேதி சுமார் 100 பேர் சாப்பிட்டுள்ளனர். ஆனால் அவர்களில் 2 பேருக்கு மட்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், உணவு பாதுகாப்புத்துறையினருக்கும் சந்தேகம் எழுந்தது. அதாவது உணவில் எவ்வித குறைபாடும் இருக்க வாய்ப்பு இல்லை என தெரியவந்தது. இதற்கிடையே கடந்த மே 1ம் தேதி அந்த ஓட்டலில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் உமா, சம்பந்தப்பட்ட ஓட்டலுக்கு சீல் வைக்க உத்தரவிட்டார், இதையடுத்து ஓட்டலைப் புட்டி உணவு பாதுகாப்புத்துறையினர் சீல் வைத்தனர்.

மேலும், சிக்கன் ரைஸ் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த மாவட்ட ஆட்சியர் உமா,



நாமக்கல் போலீசாருக்கு உத்தரவிட்டார். அவர்களும் சிக்கன் ரைஸ் உணவு மாதிரியை எடுத்து, சேலம் உணவு பகுப்பாய்வு கூடத்துக்கு அனுப்பினர். இதன் பின்னர் ஓட்டல் உரிமையாளர் ஜீவானந்தம், சிக்கன் ரைஸ் வாங்கிச் சென்ற பகவதி ஆகியோரிடம் தனித்தனியாக விசாரணை நடத்தினர்.

இதற்கிடையே உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த, பகவதியின் தாத்தா, சண்முகநாதன் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். பகவதியின் தாயார் நதியாவிற்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதை கண்டுகொள்ளாமல் பகவதி அலட்சியமாக நடந்துகொண்டார்.

இதனையடுத்து உணவு மாதிரியின் பகுப்பாய்வு முடிவில் சிக்கன் ரைசில் புச்சிக்கொல்லி மருந்து கலந்தது உறுதி செய்யப்பட்டதால் சிக்கன் ரைஸ் பார்சல் வாங்கிச் சென்ற பகவதியிடம் போலீசார் துருவித்துருவி விசாரணை நடத்தினர். அப்போது பகவதி திடீரென நான் தான் உணவில் புச்சிக்கொல்லி மருந்து கலந்தேன் என ஒப்புக்கொண்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த போலீசார் அவரிடம் மேலும் விசாரணை நடத்தியதில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண்ணை காதலித்தபோது தனது தாயாரும் தாத்தாவும் அதை ஏற்கவில்லை.

இதனால், தன்னுடைய குடும்பத்தினருக்கும், பெண்ணின் குடும்பத்தினருக்கும் பிரச்சினை ஏற்பட்டது.

அப்போது முதல் தன்னிடம் தாய் நதியா பாசமாக இல்லை என்று தெரிவித்த பகவதி மேலும் ஒரு பெண்ணிடம் உள்ள தவறான பழக்கம், செல் போனில் ஆபாச படங்களை அடிக்கடி பார்த்தது குறித்து தாயும், தாத்தாவும் கண்டித்ததால் அனைவரையும் விஷம் கொடுத்து கொலை செய்ய முடிவு செய்தேன். இதற்காக நாமக்கல்லில் உள்ள அக்ரோ கடையில் கடந்த 27 ம் தேதியே, விவசாயத்திற்கு பயன்படுத்தும் புச்சிக்கொல்லி மருந்து வாங்கி வைத்துக்கொண்டேன். பின்னர் 30ம் தேதி வீட்டிற்கு செல்லும் வழியில் நின்று சிக்கன் ரைஸ் உணவில் புச்சிக்கொல்லி மருந்தை கலந்தேன் என்றும் அதை இருவர் மட்டுமே சாப்பிட்டார்கள், மற்றவர்கள் சாப்பிடவில்லை என தெரிவித்தார்.

இதனையடுத்து நாமக்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்த போலீசார் பகவதியை கைது செய்து கோர்ட்டில் ஆஜர் செய்தனர். மாஜிஸ்திரேட் உத்தரவின்பேரில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அம்மாவையும், தாத்தாவையும் விஷம் கொடுத்து கொலை செய்ய கல்லூரி மாணவர் முயற்சித்த சம்பவம், நாமக்கல் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் மாணவர்களுக்கு வழி அனுப்பும் விழா

ஆலங்குளம், மே.4

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் நல்லூர் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் மாணவர்களுக்கு வழி அனுப்பும் விழா கல்லூரி கலையரங்கத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா ஆரம்பமானது. நல்லூர் சேகர உதவிகுரு தங்கபிரபு தொடக்க ஜெபம் செய்தார். கல்லூரி பாடகர் குழுவினர் இறைவாழ்த்து பாடினர்கள் தமிழ்த்துறை தலைவர் முனைவர் மகாராணி எலிசபெத் வேதபகுதி வாசித்தார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் திரு செ. ஜேசு ஜெகன் விருந்தினர்களை வரவேற்று கவுரவித்தார். பாளையங்கோட்டை தூய சேவியர் கல்லூரி




இயற்பியல் துறை பேராசிரியர் முனைவர் மெல்வின் டேவிட் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழா சிறப்புறை யாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சு வில்சன் வாழ்த்துறை வழங்கினார். பேராசிரியர் முனைவர் சுப்பிரமணியன் மாணவர்களின் கல்லூரி கால நினைவுகளை எடுத்துரைத்தார். பேராசிரியர் முனைவர் சிந்தா மதார் மற்றும் பேராசிரியை எபனேசர் பொன்செல்வி மாணவர்களை உற்சாகப்படுத்தும் விதமாகவும் எதிர்கால வாய்ப்புகளை பற்றியும் எடுத்துரைத்தனர். கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவிகள் இவாஞ்சலின் ஜாய்ஸ் மற்றும் ஜெஸ்மின் ஆகியோர் கல்லூரி கால நிகழ்வுகளை பற்றி பகிர்ந்து கொண்டனர். பேராசிரியர் முனைவர் தேவி கல்லூரி கால வாழ்கையில் மாணவர்களுக்கு ஏற்படும் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளை பற்றி பேசினார். பேராசிரியர் முனைவர் ஜோகன்னா உறுதிமொழி வாசிக்க மாணவர்கள் ஏற்றனர். கல்லூரியின் உடற்பயிற்சித் துறை இயக்குநர் முனைவர் எப்.எ ஜூலியன்ஸ் ராஜாசிங் நன்றியுரையாற்றினார். பேராசிரியர் சுரேஷ் சாலமன் இறுதி ஜெபம் செய்தார்.

பேராசிரியர் சாமுவேல் செல்வின் துரை விழா ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். பேராசிரியை அனிதாகவிட்லின் மற்றும் மாணவி பிரியதர்ஷினி விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் இறுதியாண்டு பயிலும் மாணவ மாணவியர்கள் திரளான அளவில் கலந்து கொண்டனர்.

# தில்லையாடி கிராமத்தில் தனியாருக்கு வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் விபத்து: 4 பேர் பலி - 4 பேர் படுகாயம்

மயிலாடுதுறை. மே.4

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமம், புல எண் 400/2யு1 ஸ்தலத்தில் மோகன் த/பெ வெங்கடேசன் என்பவருக்கு சொந்தமான வெடி பொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் 04.10.2023 அன்று மாலை 3.00 மணியாவில் நடந்த வெடி விபத்தில் கீழ்கண்ட நான்கு நபர்கள் 1. மாணிக்கம் (வயது 32) த/பெ பக்கிரி 2. மதன் (வயது 23) த/பெ செல்லதுரை 3. நிகேஷ் (வயது 22) த/பெ மணிமாறன் மற்றும் 4. ராகவன் (வயது 22) த/பெ ராஜமோகன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டனர். இவ்விபத்தில் கீழ்கண்ட 1மணிவண்ணன் (28) த/பெ பன்னீர் 2. மாசிலாமணி (55) த/பெ நாகப்பன் 3.பக்கிரிசாமி (63) த/பெ அய்யாறு மற்றும் 4. மாரியப்பன் (40) த/பெ ராமசாமி ஆகியோர்களுக்கு தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளது. இவ்விபத்து குறித்து பொறையார் காவல் நிலையத்தில் குற்ற எண் 207/2023 ர/ள 286,337,304() ஐஊ ச/ற 9(டீ)()(ய) India Exlosve Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, விபத்து நடந்ததற்கான காரணம் மற்றும் சூழ்நிலையினை கண்டறிய ஏதுவாக வெடிபொருள் சட்டம் 1884, பிரிவு 9(1) இன்படி விசாரணை மேற்கொள்ள விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்/ மாவட்ட வருவாய் அலுவலர் 14.05.2024 அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேற்படி வெடிவிபத்து தொடர்பாக விசாரணை நடத்த உள்ளார். இந்நேர்வில் வெடி விபத்து தொடர்பாக நேரில் சாட்சியம் அளிக்க விருப்பமுள்ளவர்கள் 14.05.2024 அன்று காலை 11.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விசாரணை அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் முன் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கலாம் என மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி தெரிவித்துள்ளார்.

# ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளி மாணாக்கர்களுக்கு அரசு தேர்வு இயக்ககம் மூலம் நடத்தப்பட்ட தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்திட்டம்

விழுப்புரம், மே.5

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரைபயிலும் மாணாக்கர்களுக்கு அரசு தேர்வு இயக்ககம் மூலம் நடத்தப்பட்ட தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்திட்டம் தேர்வில் தேர்ச்சி பெற்ற விழுப்புரம் மாவட்டத்தினைச் சேர்ந்த 04 மாணவர்களுக்கு பரிசுப்பொருட்கள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் சி.பழனி வழங்கினார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அரசு தேர்வு இயக்ககம் மூலம் நடத்தப்பட்ட தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு




உதவித்திட்டம் தேர்வில் தேர்ச்சி பெற்ற விழுப்புரம் மாவட்டத்தினைச் சேர்ந்த 04 மாணவர்களுக்கு பரிசுப்பொருட்கள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணக்கர்களுக்கு அரசு தேர்வு இயக்ககம் மூலம் நடத்தப்பட்ட தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகைத் திட்டம் தேர்வில் 16 மாணக்கர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இதில் விழுப்புரம் மாவட்டத்தில் பொம்புர் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 8 ஆம் வகுப்பு மாணவர்கள் எஸ்.பும்பொழிலன் எ.நித்திஷ்ராஜ் ஜெ.கவிநிதி கழிக்குப்பம் அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியில் பயிலும் 8ஆம் வகுப்பு மாணவன் பி.ராகுல் ஆகிய 04 மாணவர்கள் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகைத் திட்டம் தேர்வில் வெற்றிபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அதனடிப்படையில் இன்றைய தினம் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகைத் திட்டம் தேர்வில் பெற்ற விழுப்புரம் மாவட்டத்தினைச் சேர்ந்த 04 மாணவர்களுக்கு சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரகம் மூலம் தலா ரூயஅ.5000ஃ- மதிப்பிலான படிப்பு சார்ந்த புத்தகங்கள் உள்ளிட்ட 21 பொருட்கள் அடங்கிய பரிசுப்பெட்டகம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 சிறப்பு உதவித்தொகையானது 12 ஆம் வகுப்பு வரை வழங்கப்படவுள்ளது என மாவட்ட கலெக்டர் சி.பழனி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் இரா. வளர்மதி மாவட்ட உதவி கல்வி அலுவலர் ஜெ.கலியவரதன் தலைமையாசிரியர்கள் ராஜேந்திரன் சுப்பிரமணியன் மற்றும் பெற்றோர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



கோவை மாவட்ட கலெக்டர் காந்திகுமார் பாடி தலைமையில் கலெக்டரகத்தில் கோடை காலத்தில் சீரான குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீரை சிக்கனமாக கையாள்வது தொடர்பான பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது. உடன் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி கிரியப்பனவர், கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், திருப்பூர் மாவட்ட வன அலுவலர் ஜெயராஜ், கூடுதல் கலெக்டர் வளர்ச்சி ஸ்வேதா சுமன் உள்பட பலர் உள்ளனர்.

# பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி, பாதுகாப்பான, சுகாதாரமான குடிநீர் வழங்கிட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் அறிவுரை

நாமக்கல் மே.4

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம் நகராட்சி, காவிரி நகரில் உள்ள தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மாவட்ட கலெக்டர் ச.உமா குடிநீரின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கொமாரபாளையம் நகராட்சி முதல் நிலையில் 33 வார்டுகளை உள்ளடக்கிய 7.10 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட சுமார் 85,000 மக்கள் தொகை உள்ள நகராட்சி ஆகும். இங்கு மொத்தம் 22,053 குடியிருப்புகள் உள்ளது. கொமாரபாளையம் நகராட்சியின் குடிநீர் திட்டம் காவேரி நகர் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இயல்பு நீரேற்று நிலையத்தில் 60.00 ஹெச்.பி டர்பைன் மோட்டார் மற்றும் 25.00 ஹெச்.பி திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் 7.50



எம்.எல்.டி அளவு குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு, எடப்பாடி சாலையில் உள்ள 9.66 எம்.எல்.டி () திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து 120.00 ஹெச்.பி மற்றும் 50.00 ஹெச்.பி திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் 71.60 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 8 குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்படுகிறது.

தற்போதைய மக்கள் தொகையின்படி 7.20 எம்.எல்.டி () குடிநீர் தேவை, தினசரி சராசரியாக 7.50 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுத்து சுத்திகரிக்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும் தொடர்ந்து சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

கோடைகாலத்தினை கருத்தில் கொண்டு கொமாரபாளையம் நகராட்சிக்கான குடிநீர் திட்ட செயல்பாடுகள் குறித்து மாவட்ட கலெக்டர் ச.உமா, ஆய்வு மேற்கொண்டு, குடிநீரின் தரம், விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு, பயன் பெறும் மக்கள் தொகை, சுத்திகரிப்பு திறன் உள்ளிட்ட பல்வேறு விபரங்களை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பொதுமக்களுக்கு தங்குதடையின்றி பாதுகாப்பான, சுகாதாரமான குடிநீரை வழங்கிட நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளில் கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் கா.ப.குமரன், நகராட்சிப் பொறியாளர் அ.ராஜேந்திரன், சுகாதார அலுவலர் ஆர்.ராமமூர்த்தி உட்டப துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலைகளில் அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், மே.4

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலைகளில் அடிப்படை வசதிகள் குறித்து முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.குமரகுரு, மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். தலைமை நீதிதுறை நடுவர் கே.கவிதா, இலவச சட்ட உதவிமைய செயலர் கதிரவன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த ஆய்வின்போது இராமநாதபுரம் மாவட்ட சிறைச்சாலை, பரமக்குடி மகளிர் தனிச்சிறைச்சாலை மற்றும் முதுகுளத்தூர் கிளை சிறைச்சாலையில் கைதிகள் அறை, சமையல் கூடம், குளியல் அறை, குடிநீர், நூலகம், பார்வையாளர் அறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



மேலும் சிறைகளிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை, கைதிகளின் குற்றங்களுக்கான காரணங்கள், பார்வையாளர்கள் அனுமதிக்கப்படும் நேரம், பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களிடம் கேட்டறிந்தனர்.

இந்த ஆய்வின்போது வட்டாட்சியர்கள் சுவாமிநாதன் (இராமநாதபுரம்), கார்த்திகேயன் (திருவாடானை), சாந்தி (பரமக்குடி), சடையாண்டி (முதுகுளத்தூர்) ஆகியோர் உடனிருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

புதுக்கோட்டை, மே.4

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் செயல்படுத்தப் பட்டுவரும், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்து, துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

தமிழக அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பொதுமக்களின் நலனிற்காக பல்வேறு திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் ஊரகப் பகுதிகளில் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, மின் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை செயல்படுத்தி வருகிறது. அதன்படி இன்றையதினம் குடிநீர் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்து, துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கோடைகாலம் நிலவி வரும் இந்த காலக்கட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதன்மூலம் கேணிகள், ஆழ்குழாய் கிணறுகள், குளங்கள், நீர் இருப்பு பகுதிகள் உள்ளிட்டவைகளில் நீர் குறைவாகவே உள்ளது. இதனை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் வகையில் தொடர்புடைய அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு, தொடர்புடைய அலுவலர்கள் உடனடியாக சீரான குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் தட்டுபாடு உள்ள இடங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

எனவே பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை வழங்கிட அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பொறி.பரமசிவன், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஒன்றிய அரசின் குடிமைப் பணி தேர்வில் மூன்றாம் முறையாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்று இளைஞர்களுக்கு வழிகாட்டும் பீடித்தொழிலாளி மகள்

தென்காசி, மே.4

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள 95 பணியிடங்களுக்கான குரூப் 1 தேர்வுகள் அறிவிப்பு கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, விண்ணப்பித்தவர்களுக்கான முதல்நிலைத் தேர்வு கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி நடைபெற்றது. அதன் முடிவுகள் கடந்த 2023 ஏப்ரல் மாதம் வெளியானது.

இதைத் தொடர்ந்து, குரூப் 1 முதன்மை தேர்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்டன. அதில், 1,333 ஆண்கள், 780 பெண்கள் என மொத்தம் 2,113 பேர் கலந்துகொண்டு தேர்வை எழுதினர். இதில் 90 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இந்த குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் ஒருவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கனவு திட்டமான, நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெற்றவர் என்ற செய்தி வெளியாகி நான் முதல்வன் திட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றியது.

இம்முறை குரூப் 1 தேர்வில் வெற்றிபெற்றவர்களில் பலர் மிகவும் ஏழ்மையான நிலையில் தனது சொந்த முயற்சியில் வீட்டிலிருந்தே படித்து வெற்றி பெற்றுள்ளனர் எனும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிகின்ற மூன்று பெண் ஊழியர்கள் ஒரேநேரத்தில் குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்று அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அதேபோல, தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பீடி சுற்றும் தொழிலாளி ஒருவரின் மகள் எஸ். இன்பா என்பவர் ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஏழ்மையான ஒரு பீடிதொழிலாளியின் மகள். இவர் பொருளாதார வசதி இல்லாததால், வீட்டிலிருந்தே படித்துள்ளார். இவர் ஏற்கனவே இரண்டுமுறை ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை. எனினும், இன்பா விடாமுயற்சியுடன் மூன்றாவது முறையாக தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் அகில இந்திய அளவில் 851வது இடத்தை பெற்றுள்ளார்.

இன்பா நான் முதல்வன் திட்டத்தின் மூலம் மாதம் 7500 ரூபாய் உதவித்தொகை பெற்று இத்தேர்விற்கு படித்து வந்தார். 2023ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வின் முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றதையடுத்து மாதம் 25,000 ரூபாய் உதவித்தொகை பெற்றார். தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கிடைத்த உதவித்தொகையால் பொருளாதார தேவைப் பற்றிய கவலையின்றி இன்பா அவர்களால் முழு கவனத்துடன் இத்தேர்விற்காக படித்து வெற்றி பெற முடிந்தது.

படிப்புக்கு ஏழ்மை ஒரு தடையில்லை, முயன்றால் படித்து முன்னேறலாம். வெற்றி முகட்டைத் தொடலாம் என்பதை இன்றைய இளைஞர்களுக்கு உணர்த்துவதாக இன்பா அவர்களின் வாழ்க்கையும், அவரது விடாமுயற்சியும் வழிகாட்டுகின்றன.

மே முதல் நாள் தொழிலாளர் திருநாள். பீடி சுற்றும் ஒரு தொழிலாளியின் மகள் இன்பா விடாமுயற்சியுடன் படித்து, வென்று உயர் அதிகாரியாகப் பொறுப்பேற்க விருக்கும் செய்தி அனைவருக்கும் முன்னுதாரனமாக அமைந்துள்ளது. மே தின வாழ்த்துகளை இன்பா அவர்களுக்கும், அவருடைய பெற்றோருக்கும் அனைவரும் கூறி, பாராட்டுகிறார்கள்.,

# இந்திய ஜனநாயக கட்சி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு

விழுப்புரம், மே 4

இந்திய ஜனநாயக கட்சி (ஐ.ஜே.கே) சார்பில் விழுப்புரத்தில் நீர், மோர் பந்தல் திறக்கப்பட்டது.

விழுப்புரம் நான்கு முனை சிக்னல் அருகே நீர் மோர் பந்தல் திறப்பு விழா நேற்று காலை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாநில இளைஞரணி அமைப்பு செயலாளர் ஆதவன் ஆர்.கே. அறிவு தலைமை தாங்கி, நீர்மோர் பந்தலை திறந்து வைத்தார்.

இதில் ஏழை, எளியவர்களுக்கு இளநீர், தர்பூசணி, பனை நுங்கு, நீர்மோர் உள்ளிட்டவை வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி செயலாளர் பகவதி சுரேந்தர், மாவட்ட செயலாளர் ஜான், மாவட்ட பொருளாளர் வேல் ராஜன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ஆர்.கே. ராகுல், நகர தலைவர் ராகுல், நகர செயலாளர் இப்பு, மாவட்ட இளைய வேந்தர் பேரவை செயலாளர் வேணுகோபால், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி செந்தில் விநாயகம் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து எல்லைக்குட்பட்ட தனியார் பள்ளிகளின் வாகனங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகள்: கலெக்டர் ஆய்வு

கிருஷ்ணகிரி, மே.4

கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து துறை சார்பாக, தனியார் பள்ளி வாகனங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பணிகளை மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்டகலெக்டர் கே.எம்.சரயு தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி ஆகிய நான்கு வட்டாரங்களில் 89 தனியார் பள்ளிகளை சேர்ந்த 490 பள்ளி வாகனங்கள் இயங்கி வருகின்றன. இதில், கிருஷ்ணகிரி மற்றும் பர்கூர் ஆகிய இரண்டு வட்டாரங்களை சேர்ந்த 52 தனியார் பள்ளிகளின் 315 பள்ளி பேருந்துகள் முதல்கட்டமாக பள்ளி வாகனங்கள் சிறப்பு விதிகள் 2012ன்படி, 22 அம்சங்களுடன் இயக்கப்படுகின்றனவா என பள்ளி ஆய்வு கமிட்டிகளுடன் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில், பள்ளி வாகனங்களில் முதலுதவி




பெட்டி, தீயணைப்பு கருவி, அவசர வழி, வேக கட்டுப்பாடு மற்றும் வாகன ஆவணங்கள் முறையாக பராமரிப்படுவதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவசர காலங்கள் அல்லது அசாதாரண சுழ்நிலைகளில் மாணவர்கள் உடனடியாக தொடர்புகொள்ள அவசரகால பொத்தான் பள்ளி வாகனங்களில் பொருத்தப்பட வேண்டும். குழந்தைகள் வாகனங்களில் பாதுகாப்பாக ஏறும் பொழுது படிகட்டுகள் மற்றும் தரைதளம் சரியான அளவு இருக்கின்றதா என அளவீடு செய்யப்பட்டது. வாகனங்களில் இருபுறமும் பள்ளிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள், கைபேசி எண்கள் கட்டாயம் எழுதப்பட்டு இருக்க வேண்டும். மேலும், வாகன ஓட்டுநர்கள் தங்களுடைய வாகனத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். தற்பொழுது இவ்வருடாந்திர ஆய்வில் வாகனம் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும் நல்ல முறையில் உள்ளது. போக்குவரத்துதுறை சார்பாக, வாகனங்களை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள். அவற்றை நன்கு கவனித்து மாணவர்களை பாதுகாப்பாக கொண்டு சேர்க்க வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகளுக்கு ஏற்றவாறு வாகனத்தை இயக்க வேண்டும். போக்குவரத்து மற்றும் காவல்துறை சார்பாக சாலை விபத்து தடுப்பது குறித்து பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி வருகிறோம். இருந்தாலும், பல்வேறு சாலை விபத்துக்கள் ஏற்படுகிறது. இந்த சாலை விபத்துகளை தடுக்க உங்களுடைய முழு ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. எனவே வாகன ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் கடந்த ஆண்டு வாகனத்தை இயக்கியது போல இந்த வருடமும் நல்லபடியாகவும், மிகுந்த கவனத்துடனும், பாதுகாப்புடனும் பேருந்துகளை இயக்கி மாணவ, மாணவியர்களை பாதுகாப்பாக சேர்க்க வேண்டும். தங்களுடைய ஆரோக்கியத்தையும் கவனத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் கே.எம். சரயு தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட கலெக்டர், தீயணைப்பு துறையினர் மூலம் தீ விபத்தின் போது ஓட்டுநர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டதையும், 108 ஆம்புலன்ஸ் குழுவினர்கள் விபத்தின் போது மேற்கொள்ள வேண்டிய முதலுதவி நடவடிக்கைகள் குறித்த செய்முறை விளக்கம் செய்து, ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டதை பார்வையிட்டார்.

இவ்வாய்வின் போது, வருவாய் கோட்டாட்சியர் பாபு, கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலர் எம்.பி.காளியப்பன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ப.ஆனந்தன், அன்புசெழியன், மாவட்ட கல்வி அலுவலர் ரமாவதி, தீயணைப்பு துறை நிலைய அலுவலர் சக்திவேல் மற்றும் தீயணைப்பு துறையினர், 108 ஆம்புலன்ஸ் குழுவினர் கலந்து கொண்டனர்

# திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்டபட்ட அனைத்து பள்ளி வாகனங்களும் மாவட்ட அளவிலா கூட்டாய்வு குழு

திருவண்ணாமலை, மே.4

தமிழ்நாடு அரசு ஆணை எண்: 727, உள் (போ.7) துறை, நாள்: 30.09.2012ன் கீழ் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மோட்டார் வாகன (பள்ளி வாகனங்கள் மீதான ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடு சிறப்பு விதிகள் 2012 ன்படி) முழுவதும் உள்ள பள்ளி மாணவர்கள் பள்ளி பேருந்துகளில் சிரமமின்றியும் விபத்தின்றியும் பயணம் செய்யும் வண்ணம் பள்ளி பேருந்துகளை ஆண்டுக்கு ஒருமுறை கூட்டாய்வுக்கு உட்படுத்தி தகுதிச்சான்று பெற்ற பின்னரே பொது சாலையில் இயக்கப்பட வேண்டும். 2024-2025 ஆம் ஆண்டிற்கு திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்டபட்ட அனைத்து பள்ளி வாகனங்களும் மாவட்ட அளவிலா கூட்டாய்வு குழுவினரால் திருவண்ணாமலை மாவட்ட பெருந்திட்ட வளாகம், ஆயுதப்படை மைதானத்தில் 09.05.2024 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருவண்ணாமலை ஆகியோர் முன்னிலையில் கீழ்காணும் மாவட்ட அளவிலான இடைநிலைக் குழுவினரால் கூட்டாய்வு செய்யப்பட உள்ளது.

மாவட்ட அளவிலான இடைநிலைக் குழு 1. வருவாய் கோட்டாட்சியர் (தலைவர்) 2. வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (உறுப்பினர்) 3. காவல் துணை கண்காணிப்பாளர் (உறுப்பினர்) 4. முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் (உறுப்பினர்) 5. மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை ஐ/ ஐஐ பள்ளி வாகனங்கள் இயக்கத்தின்போதும் கீழ்க்காணும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

ஆனைத்து கல்வி நிறுவன பேருந்துகளுக்கும் அனுமதி சீட்டு நடப்பில் இருக்க வேண்டும். பொதுச்சாலையில் இயக்குவதற்கு தரமான வாகனம் என நடப்பில் உள்ள தகுதி சான்று பெற்ற பின்னரே பொது சாலையில் இயக்கப்பட வேண்டும். நடப்பில் உள்ள காப்பு சான்று ஆய்வுக்கு இருக்கவேண்டும். நடப்பு சாலை வரி செலுத்திய பின்னரே வாகனம் பொதுசாலையில் இயக்கப்பட வேண்டும். கல்வி நிலையப் பேருந்து இயக்கும் போது ஓட்டுநர் மற்றும் உதவியாளர் சீருடையில் இருக்க வேண்டும். நடப்பு புகைச் சான்று ஆய்வுக்கு இருக்க வேண்டும். மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிக்கு உட்பட்டு பள்ளிப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். வாகனத்தின் முன் பக்கம் ஒரு கேமரா பொருத்தப்பட வேண்டும்.

வாகனத்தினை பின்னோக்கி இயக்கப்படும் போது பின்புறத்தை முழுவதுமாக ஓட்டுநர் பார்க்கும்

வண்ணம் வாகனத்தின் பின்புறத்தில் ஒரு கேமரா பொருத்தப்பட வேண்டும். வாகனத்தின் உட்புறமாக ஊஊவுஏ கேமரா மற்றம் புளூ கருவி பொருத்தப்பட வேண்டும். நடப்பில் உள்ள ஆவணங்களின்றி பள்ளி வாகனம் பொது சாலையில் இயக்கப் படுமானால் அவற்றை மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு சிறைபிடிப்பதோடு வாகனத்தின் அனுமதிசீட்டு ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பள்ளி மாணவர்களை அழைத்துச்செல்வதால் இதில் தனி கவனம் செலுத்த வேண்டும் என அனைத்து பள்ளி நிர்வாகத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஆய்வுக்குழுவினரால் அனுமதிக்கப் பட்ட பள்ளி வாகனங்கள் மட்டுமே பள்ளி குழந்தைகளை அழைத்துவர உபயோகப்படுத்த வேண்டும்.

திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குற்பட்ட அனைத்து தனியார் பள்ளி

பேருந்துகளையும் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர்/ தாளாளர்/ முதல்வர் அல்லது பொறுப்பாளர் தத்தம் பள்ளி பேருந்துகளை கட்டாயம் கூட்டாய்வுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் அங்ஙனம் கூட்டாய்வுக்கு

உட்படுத்தப்படாத வாகனங்களை பொது சாலையில் இயக்க அனுமதி இல்லை என மாவட்ட கலெக்டர் தெ.பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

# இண்ஃர் பவர்கிரிட் கார்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் பொதுத்துறை நிறுவனங்கள் சார்பில் சமூக பொறுப்பு நிதியிங்கீழ் அதி நவீன மருத்துவ உபகரணங்கள்

தர்மபுரி, மே.4

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமணை மற்றும் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு இண்ஃர் பவர்கிரிட் கார்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் பொதுத்துறை நிறுவனங்கள் சார்பில் சமூக பொறுப்பு நிதி 2023-2024ன் கீழ் ரூ.67.94 இலட்சம் மதிப்பீட்டில் அதி நவீன மருத்துவ உபகரணங்களை மாவட்ட கலெக்டர் கி.சாந்தி வழங்கினார்.

தருமபுரி மாவட்டம் இண்/ர் பவர்கிரிட் கார்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் பொதுத்துறை நிறுவனம் சார்பாக சமூக பொறுப்பு நிதி 2023 -2024 ன் கீழ் பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 67 இலட்சத்து 94 ஆயிரம் மதிப்பீட்டில் அதி நவீன அத்தியாவசிய மருத்துவ




உபகரணங்களை மாவட்ட கலெக்டர் கி.சாந்தி, பவர்கிரிட் கார்பரேசன் தலைமை பொது மேலாளர் (மனிதவள மேலாண்மை) பெங்களூரு மதிலேஸ்குமார், தருமபுரி மூத்த உதவி பொது மேலாளர் மா.பாலு ஆகியோர் வழங்கினர்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் செ. பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், ஊரக நலப்பணிகள் மற்றும் சுகாதாரத்துறை இணை இயக்குனர் சாந்தி, பென்னாகரம் மருத்துவ அலுவலர் கனிமொழி, பாலக்கோடு மருத்துவ அலுவலர் பாலசுப்பிரமணி, மருத்துவர்கள் மற்றும் பவர்கிரிட் கார்பரேசன் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## குபேரா படத்தில் நாகர்ஜூனா ஃபர்ஸ்ட் லுக் மாஸ் வீடியோ வெளியீடு




தனுஷ் மற்றும் ராஷ்மிகா மந்தனா நடிப்பில் உருவாகும் புதிய படம் குபேரா. சேகர்கம்முலா இயக்கும் இந்த படத்தில் தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர் நாகர்ஜூனா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். தேவி ஸ்ரீ பிரசாத் இந்த படத்திற்கு இசையமைக்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் டைட்டில் போஸ்டர் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த படம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், குபேரா படத்தில் நாகர்ஜூனாவின் ஃபர்ஸ்ட் லுக் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.

கனமழை பெய்யும் இரவு நேரத்தில் கட்டுக்கட்டாக பணம் அடுக்கி வைக்கப்பட்டுள்ள லாரி அருகில் நாகர்ஜூனா குடை பிடித்து நிற்கும் காட்சிகள் ஃபர்ஸ்ட் லுக் வீடியோவில் இடம்பெற்றுள்ளன. இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

## "எலெக்ஷன்" படத்தின் 2வது சிங்கிள் வெளியானது




'உறியடி', 'பைட் கிளப்' உள்ளிட்ட படங்களில் நடித்து புகழ்பெற்ற நடிகர் விஜயகுமார் தற்போது 'எலெக்ஷன்' என்ற புதிய படத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தை 'சேத்துமான்' பட புகழ் இயக்குனர் தமிழ் இயக்கியுள்ளார்.

'அயோதி' புகழ் ப்ரீத்தி அஸ்ரானி மற்றும் புதுமுகம் ரிச்சா ஜோஷி ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். 'ரீல் குட் பிலிம்ஸ்' ஆதித்யா இந்த படத்தை தயாரித்துள்ளார்.


இந்த படத்துக்கு கோவிந்த் வசந்தா இசையமைத்து உள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று வரும் நேரத்தில் 'எலெக்ஷன்' என பெயர் சூட்டப்பட்டு இருப்பதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து உள்ளது.

இந்த படத்தின் முதல் 'சிங்கிள்' கடந்த மாதம் வெளியானது. இந்நிலையில், எலெக்ஷன் படத்தின் இரண்டாவது சிங்கிள் இன்று வெளியாகியுள்ளது.

மன்னவன் என்று துவங்கும் இந்த பாடலின் லிரிக்கல் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.


## சிங்கம் ஒன்று புறப்பட்டதே வேட்டையன் படப்பிடிப்பிற்கு கிளம்பிய ரஜினிகாந்த்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 'வேட்டையன்' புதிய படத்தை டைரக்டர் ஞானவேல்ராஜா இயக்கி வருகிறார். இதில் அமிதாப் பச்சன், பஹத் பாசில், ராணா டகுபதி, மஞ்சு வாரியர், ரித்திகா சிங், துஷரா விஜயன் உள்ளிட்ட பல முக்கிய நடிகர்கள் நடிக்கின்றனர். லைகா புரொடக்சன்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். வேட்டையன் படப்பிடிப்பு நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, ஐதராபாத், ஆந்திரா ஆகிய இடங்களில் நடந்தன. இந்த படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்பு மும்பை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

இறுதி கட்ட படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக நடிகர் ரஜினிகாந்த் சென்னை விமான நிலையத்தில் இருந்து விமானம் மூலம் மும்பைக்கு புறப்பட்டு சென்றார். விமான நிலையத்திற்கு காரில் வந்து இறங்கிய ரஜினிகாந்திற்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். வயதானாலும் அவரின் நடை மற்றும் பேச்சு என்றும் இளமையாகவுள்ளது என அந்த வீடியோவை ரசிகர்கள் சமூகவலைதளங்களில் பகிர்ந்துக் கொண்டு வருகின்றனர். படப்பிடிப்பு தளத்தில் ரஜினி ரசிகர்களுடனும் , மஞ்சு வாரியரின் தம்பியான மது வாரியருடன் எடுத்த புகைப்படம் சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## விஜயுடன் ஒரு பாடலுக்கு நடனமாட மறுத்த ஸ்ரீலீலா



நடிகர் விஜய் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் கோட். வெங்கட் பிரபு இயக்கும் இப்படத்தை ஏஜிஎஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இப்படத்தில் நடிகர் விஜய்க்கு ஜோடியாக மீனாட்சி சௌத்ரி நடிக்கிறார். மேலும் சினேகா, லைலா, மோகன், பிரசாந்த், பிரபுதேவா, அஜ்மல், நிதின் சத்யா, வைபவ், பிரேம்ஜி, பார்வதி நாயர் நடிக்கின்றனர்

இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்து உள்ளார் GOAT படத்தில் நடிகர் விஜய் கதாநாயகன், வில்லன் உள்ளிட்ட இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

கோட்' படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு ரஷ்யாவில் நடைபெற்று வருகிறது. அங்கு விஜய் நடிக்கும் ஆக்ஷன் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறது. இப்படத்தின் கதைக்கும் மாஸ்கோவுக்கும் சம்பந்தம் இருப்பதால் தான் ரஷ்யாவில் படப்பிடிப்பை நடத்தி வருகிறார்கள்

மேலும் இப்படத்தின் ஒரு பாடலுக்கு திரிஷா நடனமாட உள்ளதாக தகவல் வெளியானது.

அதைத்தொடர்ந்து திரிஷாவுக்கு பதில் தெலுங்கில் தொடர்ந்து முன்னணி நடிகையாக பல படங்களில் நடித்து வரும் இளம் நடிகை ஸ்ரீலீலாவை ஒரு பாடலுக்கு விஜயுடன் நடனமாட வைக்க இயக்குனர் வெங்கட்பிரபு திட்டமிட்டார். இது தொடர்பாக அந்த நடிகையுடன் பேச்சுவார்த்தை நடந்தது.

ஸ்ரீலீலா தமிழில் தனது முதல் படம் ஒரு பாடலுக்கு மட்டும் நடனம் ஆடும் படமாக இருந்துவிட கூடாது என்பதால் அந்த வாய்ப்பை தற்போது நிராகரித்து விட்டார் என்கிற தகவல் தற்போது வெளியானது.

நடன திறமை கொண்ட ஸ்ரீலீலா விஜயுடன் இணைந்து நடனம் ஆடும்போது தமிழ் ரசிகர்களிடம் மிகப்பெரும் வரவேற்பு கிடைக்கும் என தெரிந்தும் எதிர்காலத்தை மனதில் கொண்டு அந்த வாய்ப்பை அவர் மறுத்துவிட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

## சென்னையில் உள்ள ஜான்வி கபூரின் பண்ணை வீட்டில் தங்க வேண்டுமா?



கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஸ்ரீதேவி மூத்த மகள் ஜான்வி கபூர் சில நாட்கள் இந்த வீட்டில் தங்கி இருந்தார்.

இந்த ஆடம்பர பங்களா பொதுமக்கள் தங்குவதற்கு வாடகைக்கு விடப்படுகிறது.

மறைந்த நடிகை ஸ்ரீதேவிக்கு சொந்தமான ஆடம்பர பங்களா கடற்கரை சாலையில் உள்ளது. பல்வேறு ஆடம்பர வசதிகளுடன் கூடிய இந்த வீடு அவரது மறைவுக்கு பின்பு போதிய பராமரிப்பின்றி இருந்து வந்தது.

சென்னை வரும்போது ஸ்ரீதேவி அடிக்கடி இந்த வீட்டில் தங்கி செல்வார். அவர் வாங்கிய முதல் ஆடம்பர மாளிகையான இந்த வீட்டை உலகம் முழுவதும் உள்ள கலைப் பொருள்கள் மற்றும் ஓவியங்களால் அலங்கரித்து வைத்திருந்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஸ்ரீதேவி மூத்த மகள் ஜான்வி கபூர் சில நாட்கள் இந்த வீட்டில் தங்கி இருந்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஜான்வி கபூர் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த ஆடம்பர பங்களா பொதுமக்கள் தங்குவதற்கு வாடகைக்கு விடப்படுகிறது.

மே 12ந் தேதி முதல் இதற்கான முன்பதிவு தொடங்க இருக்கிறது. இந்த ஆடம்பர வீட்டில் தென்னிந்திய உணவுகள் மற்றும் நெய் பொடி சாதம், பால்கோவா மற்றும் விருப்பமான சுவையான உணவு வசதிகள் தங்கும் விருந்தினர்களுக்கு கிடைக்கும். இதுபற்றி ஜான்வி கபூர் கூறியதாவது: எனது மிகவும் நேசத்துக்குரிய குழந்தை பருவ நினைவுகள் சென்னையில் உள்ள கடற்கரை சாலையில் எனது குடும்பத்துடன் கோடை காலத்தை கழித்தது என இந்த வீட்டை ஒரு சரணாலயம் போல் உணர்கிறேன். அந்த உணர்வை எனது ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அதனால்தான் முதன் முறையாக சில விருந்தினர்களுக்கு எங்கள் வீட்டை திறக்கிறேன். 4 ஏக்கரில் உள்ள இந்த வீட்டில் நீச்சல் குளம் வசதியும் உள்ளது. எங்கள் கடலோர வீட்டுக்கு தனிப்பட்ட சுற்றுலாவுக்கு உங்களை அழைத்து செல்கிறேன். காலையில் யோகா மற்றும் அற்புதமான உணவை நீங்கள் அனுபவிப்பீர்கள் என்று கூறினார். ஜான்வி கப்பூர் நடித்த Mr & Mrs மஹி வரும் மே 31 வெளியாகவுள்ளது. தெலுங்கு மொழியில் ஜூனியர் என்.டி.ஆர் மற்றும் சைஃப் அலி கான் இணைந்து நடித்துள்ள தேவாரா படத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐபிஎல் தொடரில் மிக மோசமான சாதனையை பதிவு செய்த யுஸ்வேந்திர சாஹல்



ஐபிஎல் தொடரின் இன்றைய ஆட்டத்தில் ஐதராபாத் ராஜஸ்தான் அணிகள் மோதுகிறது. இதில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய ஐதராபாத் அணி முதலில் தடுமாறினாலும் பின்னர் அதிரடி காட்டி அணியின் ஸ்கோரை உயர்த்தினார். இறுதியில் ஐதராபாத் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 201 ரன்கள் எடுத்தது.

ராஜஸ்தான் தரப்பில் யுஸ்வேந்திர சாஹல் 4 ஓவர்கள் வீசி 62 ரன்களை விட்டுக் கொடுத்தார். இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் தனது மோசமான சாதனையை சாஹல் படைத்துள்ளார். இதற்கு முன்னர் கொல்கத்தா அணிக்கு எதிராக 1 விக்கெட் வீழ்த்தி 54 ரன்கள் விட்டுக் கொடுத்ததே மோசமான சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## எப்.ஐ.எச். மகளிர் புரோ ஹாக்கி லீக்: இந்திய மகளிர் அணி அறிவிப்பு



2023, 2024 எப்.ஐ.எச். மகளிர் புரோ ஹாக்கி லீக் சீசனுக்கான அடுத்த கட்ட ஆட்டங்கள் பெல்ஜியம் மற்றும் இங்கிலாந்தில் நடைபெற உள்ளன. அதன்படி பெல்ஜியத்தில் வரும் 22ம் தேதி முதல் 26ம் தேதி வரையிலும், இங்கிலாந்தில் அடுத்த மாதம் 1ம் தேதி முதல் 9ம் தேதி வரையிலும் நடைபெற உள்ளன.

இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய மகளிர் ஹாக்கி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணிக்கு சலிமா டெடெ கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். துணை கேப்டனாக நவ்னீத் கவுர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சலிமா டெடெ (கேப்டன்), நவ்னீத் கவுர், சவிதா, பிச்சு தேவி கரீபம், நிக்கி பிரதான், உடிதா, ஐஷிகா சவுத்ரி, மோனிகா, ஜோதி சவுத்ரி, மஹிமா சவுத்ரி, வைஷ்னவி விடல் பால்கே, நேஹா, ஜோதி, பல்ஜீத் கவுர், மனீஷா சவுகான், லால்ரேம்சியாமி, மும்தாஜ் கான், சங்கீதா குமாரி, தீபிகா, ஷர்மிளா தேவி, பிரீத்தி துபே, வந்தனா கட்டாரியா, சுனேலிட்டா டோப்போ, தீபிகா சோரேங்.

## கடைசி பந்தில் விக்கெட்டை இழந்த ராஜஸ்தான் 1 ரன்னில் த்ரில் வெற்றி பெற்ற ஐதராபாத்



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இன்று ஐதராபாத்தில் உள்ள ராஜீவ்காந்தி சர்வதேச ஸ்டேடியத்தில் நடைபெறும் 50வது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன. இதில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது.

அதன்படி களமிறங்கிய ஐதராபாத் அணி முதலில் தடுமாறினாலும் கடைசியில் அதிரடியாக விளையாடி ரன்களை குவித்தனர்.

இறுதியில் ஐதராபாத் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 201 ரன்கள் எடுத்தது. ராஜஸ்தான் தரப்பில் ஆவேஷ் கான் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். நிதிஷ் ரெட்டி 76 ரன்னிலும் கிளாசன் 42 ரன்னிலும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனையடுத்து களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு தொடக்கமே சொதப்பாலாக அமைந்தது. ராஜஸ்தான் முதல் ஓவரில் 1 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. பட்லர், சாம்சன் 0 ரன்னிலும் வெளியேறி அதிர்ச்சி அளித்தனர்.

இதனையடுத்து ஜெய்ஸ்வால் ரியான் பராக் ஜோடி பொறுப்புடன் விளையாடினர். இருவரும் அரை சதம் விளாசி அசத்தினர். ஜெய்ஸ்வால் 67 ரன்னிலும் பராக் 77 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். அதனை தொடர்ந்து ஹெட்மயர் 13 ரன்னில் நட்ராஜன் பந்து வீச்சில் அவுட் ஆனார்.

இதனால் ராஜஸ்தான் வெற்றி பெற 2 ஓவரில் 20 ரன்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரை கம்மின்ஸ் வீசினார். முதல் பந்தில் ஜூரல் (1) விக்கெட்டை இழந்தார். அடுத்து வந்த அஸ்வின் 1 ரன் எடுத்தார். அடுத்த 3 பந்துகளை ரோமன் பவல் டாட் பந்துகளாக மாற்றினார். கடைசி பந்தை பவல் சிக்சராக மாற்ற கடைசி ஓவரில் ராஜஸ்தானுக்கு 13 ரன்கள் தேவைப்பட்டது.

கடைசி ஓவரை புவனேஸ்வர் குமார் வீசினார். முதல் பந்தை அஸ்வின் 1 ரன் எடுத்தார். 2வது பந்தை பவல் 2 ரன்கள் எடுத்தார். 3வது பந்தை பவுண்டரி விரட்டினார் பவல். இதனால் கடைசி 3 பந்தில் ராஜஸ்தானுக்கு 6 ரன்கள் மட்டுமே தேவைபட்டது. அடுத்த பந்தில் பீல்டிங்கின் தவறால் 2 ரன்கள் எடுக்கப்பட்டது. பரபரப்பான கட்டத்தில் 5வது பந்தும் 2 ரன்கள் எடுக்கப்பட்டது.

இதனால் கடைசி பந்தில் 2 ரன்கள் தேவை என்ற நிலையில் சிறப்பாக பந்து வீசிய புவனேஸ்வர் குமார் விக்கெட் வீழ்த்தி அசத்தினார். இதனால் ஐதராபாத் அணி 1 ரன்னில் வெற்றி பெற்றது. ஐதராபாத் தரப்பில் புவனேஸ்வர் குமார் 3 விக்கெட்டும் நடராஜன், பேட் கம்மின்ஸ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.



உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்

விளக்கம்:
உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.



## விராட் கோலி ஸ்டிரைக் ரேட்.. ரிங்கு சிங்கிற்கு இடமில்லை.. விளக்கமளித்த அஜித் அகார்கர்

டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்திய அணி தேர்வு குறித்து இன்று செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்று கொண்டிருக்கிறது. இதில் ரோகித் சர்மா மற்றும் அஜித் அகார்கர் பங்கேற்று செய்தியாளர்கள் கேள்விக்கு பதில் அளித்து வருகின்றனர்.

விராட் கோலி ஸ்டிரைக் ரேட் மற்றும் ரிங்கு சிங் இடம் பெறாதது குறித்து அகார்கர் விளக்கமளித்தார். அதில் அஜித் அகார்கர் கூறியதாவது:

விராட் கோலியின் ஸ்டிரைக் ரேட் குறித்து எந்த கவலையும் இல்லை. அவர் ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறார். ரிங்கு சிங் அணியில் இடம் பெறாதது துரதிஷ்டமானது. அவர் எந்த தவறும் செய்யவில்லை, சுப்மன் கில் கூட.

அணியில் இரண்டு ரிஸ்ட் சுழற்பந்து வீச்சாளர்கள் தேவைப்பட்டது. மேலும் பேட்டிங் ஆல்ரவுண்டரான அக்சர் படேல் இருப்பது அணிக்கு கூடுதல் பலமாகும். இதனால் ரோகித் போட்டியின் போது ஆலோசனை செய்ய பயனுள்ளதாக இருக்கும். இந்த முடிவை எடுப்பது ரோகித் சர்மாவுக்கு கடினமாக இருந்தது. அணிக்காக மட்டுமே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வாறு அஜித் அகார்கர் கூறினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.